

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# ஆறுமுகம் இராஜேஸ்வரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவுமலர்

27.01.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எம்மை அன்போடு அரவணைத்து
பாலூட்டி சீராட்டி
இறுதி மூச்சு உள்ளவரை
எமக்காக வாழ்ந்த எங்கள்
குலவிளக்கு என்றும் அணையாத
தீபச்சுடர் எங்கள் அப்பம்மாவின்
இம்மலரை அடைக்கலம்தோட்ட
கந்தசுவாமியார் பாதங்களில்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,
திரு. திருமதி. விஜயகுமாரன்
(ராஜன், பிருந்தா)
பேரன், பேத்தி பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

## சிவபுராணம்



அருள்நெறித் திருக்கூட்டம்
குன்றக்குடி,
(இராமநாதபுரம் மாவட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றின் தத்துவம்

01. திருநீறு வெண்மையானது; தூய்மையானது. அதேபோன்று நம்முடைய உள்ளமும் தூய்மையானதாகவும் களங்கமற்ற தாகவும் இருக்க வேண்டும் என்பதை வெண்ணீறு விளக்குகின்றது.

02. வெண்ணீறு தனது தோற்றத்தால் நிலையாமையை உணர்த்துகின்றது. மேலும் "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலோர் பிடிசாம்பலாவர்" என்பதையே நினைவுறுத்துகிறது. ஆகவே அறத்துறையிலும், கல்வித் துறையிலும், அருள் துறையிலும் நாளை நாளை என்று நாள் கடத்தாமல் இன்றே செயலாற்ற வேண்டும் என்பதை நினைவுபடுத்து கிறது.

03. திருநீறு இறைவனின் சின்னம். அதைக் காணும்தோறும் கண்ணுதலான் சிந்தனை கருத்தில் மலரும். வெண்ணீறு அணியும்போது வேத விழுப்பொருளை உணரும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆகவே அனைவரும் திருநீறு அணிந்து அவன் அருளாலே அவன்தாள் வணங்கி உய்திபெறல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீறணியும் முறை

01. அதிகாலையில் எழுந்து, நன்னீராடி, தூய உடை அணிந்து, சிவ சிந்தனையுடன் திருநீறணிய வேண்டும்.

02. வண்ணமற்ற தூய்மையான, வெண்மையான திருநீற்றையே அணிய வேண்டும்.

03. வெண்ணீற்றைச் சிந்தாமல் சிறிதாக எடுத்து, வடக்கு நோக்கி நின்று அண்ணாந்து நோக்கி, 'சிவ சிவ' என்று சொல்லிக்கொண்டே சிந்தாமல் திருநீற்றைப் பூச வேண்டும்.

04. முறையாகத் திருநீறணிந்த பின் திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும். இயலாது போனால், ஓர் தனித்த தூய்மையான இடத்தில் அமர்ந்து, ஒரு ஊதுபத்தியை ஏற்றிவைத்துச் சிவபுராணத்தைப் பொருளுணர்ந்து ஓதுதல் வேண்டும்.

05. சிவபுராணப் பாராயணத்திற்குப் பிறகு, சிவ சிந்தனையுடன் மீண்டும் திருநீறணிந்து, தனது கடமைகளைச் செய்யப் புகுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் சிறப்பு

(நேரிசை வெண்பா)

தொல்லை இலும்பிறவிச்
சூழும் தளைநீக்கி
அல்லலுறுத்(து) ஆனந்தம்
ஆக்கியதே எல்லை

மருவா நெறி அளிக்கும்
வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

வான் கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே

தேன் கலந்து பால் கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாம லினிப்பதுவே.

- வள்ளலார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (திருப்பெருந்துறையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க
நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்கா தான் தாள்வாழ்க

கோகழி ஆண்ட
குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று
அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன்
இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட
வேந்தன் அடிவெல்க

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன்
பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன்
பூங்கழல்கள் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம்குவிவார் உள்மகிழும்
கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும்
சீரோன்கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி
எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி
சிவன் சேவடிபோற்றி

நேயத்தே நின்ற
நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும்
மன்னன் அடிபோற்றி

சீரார் பெருந்துறைநம்
தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம்
அருளும் மலைபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் அவன் என் சிந்தையுள்
நின்ற அதனால்
அவன் அருளாலே
அவன்தாள் வணங்கிச்

சிந்தை மகிழச்
சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும்
ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக்
கண் காட்ட வந்துஎய்தி
எண்ணுதற்கு எட்டா
எழில்ஆர் கழல் இறைஞ்சி

விண்நிறைந்து மண்நிறைந்து
மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை
இலாதானே நின்பெரும்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன்
புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரம்ஆகிப்

பல்விருகம் ஆகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்

வல் அசுரர் ஆகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத்
தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும்
பிறந்திணைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன் அடிகள்
கண்டுஇன்று வீடுற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யஎன் உள்ளத்துள்
ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா விமலா
விடைப்பாகா வேதங்கள்

ஐயா எனஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய்
இயமானன் ஆம்விமலா

பொய்யா யின எல்லாம்
போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே

எஞ்ஞானம் இல்லாதேன்
இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை
அகல்விக்கும் நல் அறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி
இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய்
அழிப்பாய் அருள்தருவாய்

போக்குவாய் என்னைப்
புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய்
சேயாய் நணியானே

மாற்றம் மனம்கழிய
நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு
நெய்கலந் தாற்போலச்

சிறந்(து)அடியார் சிந்தனையுள்
தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும்
எங்கள் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்கள்ஓர் ஐந்துடையாய்
விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்
வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய
மாய இருளை
அறம்பாவம் என்னும்
அரும்கயிற்றால் கட்டிப்

புறம்தோல் போர்த்தெங்கும்
புழுஅழுக்கு மூடி
மலஞ்சேரும் ஒன்பது
வாயிற் குடிலை

மலங்கப் புலந்ஐந்தும்
வஞ்சயைச் செய்ய
விலங்கு மனத்தால்
விமலா உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்தஅன் பாகிக்
கசிந்து(உ)ள் உருகும்
நலந்தான் இலாத
சிறியேற்கு நல்கி

நிலந்தன்மேல் வந்தருளி
நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க்
கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த
தயவான தத்துவனே
மாசற்ற சோதி
மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேன்ஆர்
அமுதே சிவபுரனே
பாசமாம் மற்றறுத்துப்
பாரிக்கும் ஆரியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள்புரிந்து
நெஞ்சில் வஞ்சம்கெட
பேராது நின்ற
பெருங்கருணைப் பேர்ஆறே

ஆரா அமுதே
அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து
ஒளிக்கும் ஒளியானே

நீராய் உருக்கிஎன்
ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும்
இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே
யாவையும்ஆய் அல்லையும்ஆம்
சோதியனே துன்இருளே
தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம்
நடுஆகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட
எந்தை பெருமானே

கூர்த்தமெய்ஞ் ஞானத்தால்
கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே
நுணுக்கரிய நுண்உணர்வே

போக்கும் வரவும்
புணர்வு(ம்)இலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே
காண்பரிய பேரொளியே

ஆற்றின்ப வெள்ளமே
அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச்
சொல்லாத நுண்உணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம்ஆம் வையகத்தின்
வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத்
தெளிவேஎன் சிந்தனையுள்

ஊற்றான உண்ணார்
அமுதே உடையானே
வேற்று விகார
விடக்குடம்பின் உட்கிடப்ப

ஆற்றேனெம் ஐயா
அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து
பொய்கெட்டு மெய்ஆனார்

மீட்டுஇங்கு வந்து
வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக்
கட்டழிக்க வல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள் இருளில் நட்டம்
பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி
அறுப்பானே ஓஎன்று
சொல்லற்(கு) அரியானைச்
சொல்லித் திருவடிக்கீழ்ச்

சொல்லிய பாட்டின்
பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின்
உள்ளார் சிவனடிக்கீழ்ப்

பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதரும் மறைகள் தேறா
இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத்(து) என்றும்
பூசனை விடாது செய்து

தொழுதகை தலைமேல் ஏறத்
துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுது அடி அடைந்த அன்பன்
அடியவர்க்(கு) அடிமைசெய்வாம்

\- திருவிளையாடல்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்...



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து இறைவன் திருவடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் திருமதி.இராஜேஸ்வரி ஆறுமுகம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எம் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் இறுதிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டோருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

அன்புடன்...

**திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம்**
(கணவர்)

**திரு. திருமதி. ஆ. முரளிதரன்**
(மகன், மருமகள்)

**ஆனந்தமாளிகை,**
**மாவடி,**
**வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ,
அது நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கின்றதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

சரணியா ஒவ்(f)செற் பிறின்ரேஸ், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org